DEPOSITION OF WITNESS
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.
CC.No. 340/2024
Prosecution witness – P.W.2

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.அழகர் | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

25.05.2026 – 03.30 PM
எதிரி ஆஜர்.
முதல் விசாரணை:–

1. நான் கோவிலாங்குளம் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான சார்பு ஆய்வாளர் திரு.சண்முகவேலு என்வபர் தற்போது பணிமாறுதலாகி சென்றுவிட்டார். இன்று பணிச்சுமை காரணமாக நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்க இயலவில்லை.

2. அவர்கள் கடந்த 2023ம் ஆண்டு கோவிலாங்குளம் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளர் புணிபுரிந்து வந்தார் என்பதை வழக்கு ஆவணங்கள் மூலம் தெரிந்து கொண்டேன். அதனடிப்படையில் அவர்களது கையெழுத்து மற்றும் கையொப்பம் பற்றி எனக்கு நன்கு தெரியும். அதனடிப்படையில் அவர்கள் சார்பாக ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

3. 28.09.2023ம் தேதி 07.00 மணிக்கு நிலையப் பொறுப்பில் இருந்தபோது அ.சா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று நிலையக் குற்ற எண்.40/2024 BNS பிரிவு 303 (2)–ன் வழக்கு பதிவு செய்துள்ளார். அந்த **புகார் மனு அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அவர் இவ்வழக்கை அன்றைய தினமே புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அன்று 07.30 மணிக்கு சம்பவ இடத்தை சாட்சிகள் சதாசிவம் மற்றும் காளிமுத்து ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும்

மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அந்த **பார்வை மகஜர் அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சாட்சிகள் இருவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

4. பின்னர் சம்பவ சாட்சிகளான சாட்சிய பட்டியலிலுள்ள 1 முதல் 2 சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் விசாரணையில் குற்ற சம்பவம் நடைபெற்றது உண்மையென தெரிய வந்ததால் எதிரியை தேடி வந்த நிலையில் திருவரை பஸ் ஸ்டாப் அருகில் TN 65 AU 2031 என்ற பைக்குடன் சந்தேகத்திற்கு இடமான நிலையில் நின்று கொண்டிருந்தவரை கைது செய்து அவரை விசாரணை செய்த போது அவர் தாமாக முன் வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் ஜோதிராமன் மற்றும் காளிஸ்வரன் மாணிக்கவேல் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்துள்ளார். அந்த **ஒப்புதல் வாக்குமூலம் அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அவர்களிடம் இருந்து 1. சுமார் 50 செ.மீ நீளமுள்ள குத்து விளக்கு ஒன்று, 2. சுமார் 246 கிராமம் எடையுள்ள பித்தளை மணி ஒன்று, 3. 378 கிராம் எடையுள்ள பித்தளை மணி ஒன்று மற்றும் திருட்டிற்கு பயன்படுத்திய TN 65 AU 2031 என்ற பதிவு எண் கொண்ட சி.டி 100 பைக் ஒன்று ஆகியவற்றை அத்தாட்சியில் அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றியுள்ளார் **அந்த அத்தாட்சி அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

6. **1. சுமார் 50 செ.மீ நீளமுள்ள குத்து விளக்கு ஒன்று அ.சா.பொ.1 என்றும் ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2. சுமார் 246 கிராமம் எடையுள்ள பித்தளை மணி ஒன்று அ.சா.பொ.2 என்றும் ஆக குறியீடு செய்யப்படுகிறது. 3. 378 கிராம் எடையுள்ள பித்தளை மணி ஒன்று என்றும் அ.சா.பொ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 4. திருட்டிற்கு பயன்படுத்திய TN 65 AU 2031 என்ற பதிவு எண் கொண்ட சி.டி 100 பைக் ஒன்று அ.சா.பொ.4**

என்றும்  ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. பின்னர் அத்துடன் 07.10.2024 ம் தேதியன்று வழக்கின் விசாரணையை முடித்து  எதிரிகள் மீது  BNS பிரிவுகள் 303 (2)–ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:–

1. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி நான் இல்லை என்றால் சரிதான்.  நான் சொல்வது போல் புலன் விசாரணை அதிகாரி புகார் மனு பெறவில்லை என்றாலும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றாலும் சரியல்ல.  சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும் சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

2. அ.சா.1 அளித்த பொய்யான புகாரைப் பெற்று சம்பவ இடம் செல்லாமல் சாட்சிகளை விசாரிக்காமல் காவல்நிலையத்தில் வைத்து வழக்கிற்கு ஏற்றார் போல் ஆவணங்கள் தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.  ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல.  கூறிய விதத்தில் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்படவில்லை என்றாலும், எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.05.25 18:42:41 +0530